(This question paper contains 2 printed pages)

Roll No.

Sr. No of Question Paper: 243

Unique Paper Code: 208161

D

Name of the Paper: Functional Grammar and Skills of Language

Name of the Course: B. A. (Prog.) Tamil Language-A

Semester: I

Duration: 3 Hours.

Max. Marks: 75

I. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக: 15

1. எழுத்து என்றால் என்ன? விவரிக்க.
2. முதலெழுத்துகள் என்றால் என்ன? சான்று தந்து விளக்குக.
3. மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துகளைச் சான்றுகளுடன் கூறுக.
4. மகரக்குறுக்கம், ஆய்தக்குறுக்கம் – இவை பற்றி விளக்குக.
5. குற்றியலுகரம், குற்றியலிகரம் – இவை குறித்து விவரிக்க.

II. ஏதேனும் ஒரு வினாவுக்கு விடைதருக. 10

1. வினைச்சொல் என்றால் என்ன? சான்றுகள் தந்து விளக்குக.
2. இயற்சொல் என்றால் என்ன? எடுத்துக்காட்டுகள் தந்து விளக்குக.
3. திரிசொல் என்றால் என்ன? சான்றுகள் தந்து விவரிக்க.

III. ஏதேனும் ஒரு வினாவுக்கு விடைதருக. 10

1. வாக்கியம் என்றால் என்ன? விளக்குக.
2. வல்லினம் மிகும் இடங்களைச் சான்று தந்து விளக்குக
3. உடம்படு மெய் என்றால் என்ன? விளக்குக.

IV. கடிதத்தின் அமைப்பை விவரிக்க. 10

(அல்லது)

தமக்கையின் திருமணத்திற்கு நீர் வருகை தர இருப்பதைத் தெரிவித்து உமது தந்தைக்கு ஒரு கடிதம் வரைக.

V. உரையாடல் உத்தி குறித்து விவரிக்க. 10

(அல்லது)

அலுவலக ஊழியர் ஒருவரிடம் உதவி கேட்கும் விதமாக ஓர் உரையாடலை எழுதுக.

P.T.O

VI. பத்தியின் அமைப்பை விவரிக்க. 10

(அல்லது)

கூடங்குளம் அணுமின் நிலையப் பிரச்சினை குறித்து ஒரு பத்தி வரைக.

VII. கீழ் வரும் பத்தியைச் சுருக்கி வரைக. 10

வடநாட்டுக் குறுநில மன்னன் பிரகத்தன் தமிழ்நாட்டிற்கு வந்து தமிழ் மன்னர்களுடன் பழகி, தமிழ் நாட்டுப் பெருஞ்செல்வர்களுள் ஒருவனாக விளங்கினான். தமிழ் மக்களின் கல்வி, வீரம், புகழ், கொடை முதலிய பண்பாடுகளை உணர்ந்த பிரகத்தன் இவற்றிற்கு மூலமாகிய தமிழ் மொழியைக் கற்றுணர விரும்பினான். தமிழில் உள்ள அற நூற்களையும் இயல் நூற்களையும் ஓரளவு கற்று புலமை பெற்றான். மேலும் தமிழ் மொழியின் எழுத்திலக்கணத்தையும் சொல்லிலக்கணத்தையும் கற்றான். பொருள் நெறி மரபினை விளக்கும் பொருளிலக்கணம் பிறமொழிகளை விடத் தமிழ் மொழியில் சிறப்பாக இருப்பதைத் தெரிந்து கொண்டான். சில புலவர்கள் அம் மன்னனுக்குப் பொருளிலக்கணத்தை எடுத்துரைத்தனர். இலக்கியத்தினை அறியாத மன்னனுக்குப் புலவர்கள் கூறிய பொருளிலக்கணம் புரியாமல் போய்விட்டது. இறுதியில் அம் மன்னன் கபிலரை அணுகி தன் குறையை முறையிட்டான். மன்னனின் வேண்டுகோளை ஏற்றுக்கொண்ட கபிலர் அகப்பொருள் மரபினை இனிது விளக்கும் ஓர் அன்பு நிகழ்ச்சியை நாடகக் காட்சியாகச் செய்யுள் வடிவில் அமைத்துக் காட்டினால், மன்னன் தமிழ் மரபினை அறிந்து மகிழ முடியும் என எண்ணினார். அவ் எண்ணத்தின் வழியாக இயற்றப்பட்டதே குறிஞ்சிப்பாட்டு. இது ஆரிய அரசன் பிரகத்தனைத் தமிழறிவித்தற்குக் கபிலர் பாடிய குறிஞ்சிப்பாட்டு என வரும் உரைக்குறிப்பால் உணரப்படுகிறது.